10.12.2024



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.55/2021**

**வா.சா. 1–ராஜா, த/பெ. துரைசாமி**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடன் உடன்பிறந்த ஒரே ஒரு சகோதரி தங்கம். என் தகப்பனார் என்னுடன் தான் இருக்கிறார். என் தாயார் அக்கா வீட்டில் குரும்பலூரில் வசித்து வருகிறார். என் அக்காவுக்கும் எனக்கும் தலா இரண்டு குழந்தைகள். 17.05.1993 ம் தேதி தாவா சொத்தை என் தாய் வழி தாத்தா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார். என் தாயார் எனக்கு 2011 ம் வருடம் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார். எனக்கு அதே 2011 ம் வருடம் திருமணம் நடந்தது. எனக்கு பெண் கிடைக்க வேண்டும் என்பதற்காக தான் என் தாயார் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைக்கும் போது உங்கள் தாயாரை கடைசி காலம் வரை பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், உங்கள் சகோதரிக்கு பாகம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி தான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்று சொன்னால் சரியல்ல, என் சகோதரிக்கு பாகம் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை.

10.12.2024



02. தாவா சொத்து 2 ¼ ஏக்கர் ஆகும். அந்த சொத்தானது நாகலாபுரம் மெயின்ரோட்டில் உள்ளது. தற்போது தாவா சொத்து எவ்வளவு விலைக்கு போகும் என்று சொன்னால் எனக்கு தெரியாது. எனக்கு எழுதிவைக்கும் போது தாவா சொத்தின் மதிப்பும் எனக்கு தெரியாது. தற்போது ஒரு மாதத்திற்கு முன்பு செண்ட் 10 இலட்சம் என்று சொல்லி 10 செண்டிற்கு அட்வான்ஸ் வாங்கினீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

(இருதரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.